**வடக்கு மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 26 / 2017 (1)**

எனது இல.**NP/07/10/04/34**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்
04.12.2017

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கு திறமை அடிப்படையில் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2017**

மேற்படி பரீட்சைக்கு ஏற்புடையதாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 26/2017 இல் பந்தி 3 இல் முதலாவது பிரிவின் 6 (இ) பந்தியில் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித்திகதி மற்றும் 7(இ) பந்தி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

**I.** பந்தி 3 இல் முதலாவது பிரிவு மட்டும் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

அதிசிறப்பு தரத்தின் வெற்றிடங்களில் 50% அளவினை உரித்துடைய நியமனங்கள் திறமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் பிரகாரம் நிரப்பப்படும் வெற்றிடங்களின் உண்ணிக்கை 18 ஆகும்.

**II.** 6 (இ) பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2017.12.31 வரை நீடிக்கப்படுகின்றது. அதன்படி விண்ணபதாரிகள் 2017.12.31 ஆந் திகதியில் எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**III.** 7(இ) பந்தி பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

விண்ணபதாரிகளுக்கு பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியிருப்பின் அதன் பிரதியுடன் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி விபரங்களுடன் ஒரு கோரிக்கைக் கடிதம் மற்றும் அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக்கூடும்.

**IV.** இந்த பரீட்சையின் பொருட்டு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்கள் அனுப்புவதை தவிர்க்கும்படி அறியத்தருகின்றேன்.

**சி.ஏ.மோகன்ராஸ்**
செயலாளர்
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.